


# இஸ்லாம் மித்திரன்.

# Islam Mittiran.

"லாஇலாஹ இல்லல்லாஹ்
முஹம்மதுறஸுலுல்லாஹ்"

புஸ்தகம்-1 { அறபு ஹு 1311 றமழான மீ 1 உ வி. ஸ. / இங்கிலிஷ் ஹு 1894 மார்ச்சு மீ 8 உ வி.கி. } இலக்கம்-2.


பிஸ்மில்லாஹிர் றஹ்மானிர் றஹீம்.

## றமளான் நோன்பு.

சர்வதயாபரனாகிய அல்லாஹுத்த ஆலாவால் எங்கள் நபி மீதிலருளப்பட்ட சத்த சத்திய இஸ்லாம்மார்க்கத்தின் ஐந்து காரியங்களில் நான்காம் விதி நோன்பு வைத்தல். அந்த நோன்பை றமளான் மாத சந்திரோதய முதல் சவ்வால் மாத சந்திரோதயம் வரைக்கும் பிடிப்பது முஸ்லிம்கள் பேரில் வேத விதியாம். இஸ்லாமாகவும், பக்குவ வயதை யுடையவராகவும், புத்திபூராயமுடையவராகவும், (ஹைலு, நிபாஸு) பெண்களின் மாதத்தீட்டு, பிள்ளைப்பேறின் தீட்டுகளைவிட்டுந் துப்பரவாகவும், நோயற்றவராகவும், விரதமிருக்க சத்தியுள்ளவராகவு மிருப்பவர்கள் நோன்பை விடாது பிடிக்க வேண்டியது. வியாதியஸ்தனும், பிரயாணியும், தீட்டுத் துடக்குள்ளவளும் அவர்கள் தங்கடமாயிருந்த நாட்களில் நோன்பைவிட்டு, அதற்கு பதலாக விடப்பட்ட நாட்களின் தொகைக்கு வேறு நாட்களில் நோன்பு பிடிக்கவேண்டியது. றமளான் மாதமாகிறது பாவங்களைச் சுட்டெக்கரித்துப்பலன்களை அதி-

கப்படுத்துகின்றமாதம். மாதங்களுக்கெல்லாம் நாயகமாகியமாதம். சந்திரன், சூரியன், நக்ஷத்திரம், (பசாசைத் தவிர) எறும்புகடையானைமுதல் எண்பத்திநான்கு நாறாயிர ஜீவாத்துமாக்களும் இரவும்பகலும் அகிலரட்சகராகிய நபிகள்நாயகம் அவர்களின் உம்மத்துமார்களின் பாவங்களை மன்னிக்கும்படியாக சர்வ சிருஷ்டிகளுடைய அல்லாவைக்கெஞ்சிக் கேட்கின்ற மாதம். நன்மைகளை இரட்டிப் பாக்கப்படும் மாதம். பாவிகளை நரகத்தைவிட்டும் உரிமை விடப்படும் மாதம். ஆயிரம் மாதங்கள் தவஞ்செய்வதைப் பார்க்கினும் வரிசையானப் பலனைத்தருகின்ற வல்லபமுடைய ஒரு இரவையுடைய மாதம். தான தருமங்களையுடைய மாதம். இந்த மாதத்தையிற் செய்கின்ற ஒரு சுன்னத்தாகிய வணக்கமாகிறது மறு மாதங்களிற் செய்யும் பறுளாகிய வணக்கத்துக்கொப்பாகும் இந்த றமளானில் நோன்பு திறக்கும் நேரமானபொழுது, நரகத்துக்குப் பாத்திரவாளியான முஸ்லிமானவர்களின் ஆயிரம் ஆயிரம் பேர்களை நரகத்தைவிட்டும் உரிமை விடப்படுகின்றன. நமது நாயகம் திருவாய்மலர்ந்தருளியதாவது;— றமளான் மாதத்தில் நோன்புவைப்பதை உங்கள் பேரில் நாயன் கற்பித்திருக்கிறான், அம்மாதத்தில் நின்று வணங்குவதை நான் உங்களுக்கு மார்க்கமாக்கினேன்: ஆதலால் யாராவது (ஈமான்) உறுதிகொண்டு பலனைத்தேடி அம்மாதத்தில் நோன்பும் வைத்து நின்றும் வணங்குவானாகில் அவனுடைய பாவமடங்கலும் அவனைவிட்டும்நீங்கி அன்றுபிறந்த பாலகனைப்போலாகிடுவான், இதன் கருத்தாவது விசுவாசமுடையவனாய் தவாபென்னும் கற்பனைத் தேடினவனாய் இம்மாதத்தையில் விரதயிருந்து வணக்கங்களையும் பூரணமாய்ச் செய்வானாகில் ஒரு பிள்ளை தன் தாய் பெற்ற அன்று பாவங்களில்லாதுஎப்படியிருக்கின்றதோ அப்படியே அவனும் பாவங்கள் மன்னிக்கப்பட்டவனாய் மீட்சியடைவானென்பதாம்.

இன்னும் றமளான் முதலிரவில் இபுறாகீம் நபிக்கு சுகுபென்னும்வேத கற்பனையையும், ஆறாம் நாளில் மூஸா நபிக்கு தவுறாத்து வேதத்தையும், பதிமூன்றாம் நாளில் ஈஸா நபிக்கு இன்ஜில் வேதத்தையும், பதினெட்டாம் நாளில் தாவூது நபிக்கு சபூர் வேதத்தையும், இருபத்துநாலா நாளில் நமது நாயகம் முஹம்மது நபி அவர்களுக்கு புறுக்கான் வேதத்தையும், நாயனளவிலிருந்து இறக்கப்பட்டனவென்று நாயகம் திருவுளம் பற்றினார்கள்.

றமளானுடைய முதலிரவில் பசாசுகளுக்கும், முரட்டாட்டஞ் செய்கின்ற ஜின்களுக்கும் விலங்கிடப்படும் நரகவாசற்களை யடைக்கப்படும், சுவர்க்க வாசற்களை திறக்கப்படும். மேலும் றமளான் இரவுகளடங்கலிலும் நன்மையைத்தேடுகிறவனே; நன்மையின்பேரில் முன்னோக்குவாயாக, தீமையைச்செய்கிறவனே; நீ அதை விட்டு விடுவாயாக, வென்று முன்வானத்தில் நின்றுகொண்டு ஒரு மலக்கு (தேவ தூதர்) சத்தமிட்டு கூவுவார்.

இன்னும் நமது சிருஷ்டி கர்த்தனாகிய அல்லாஹுத்த ஆலா றமளானின் ஒவ்வொரு இரவிலும் மூன்றுதிரம்

என்னிடத்திற் கேட்பவனுண்டா? அவன் கேட்பதைக் கொடுப்பேன். பாவமன்னிப்புத் தேடுபவன் (தவுபாச் செய்பவன்) உண்டா? அவன் தவுபாவைக் கபூல் (ஏற்று)க்கொள்வேன். பிழைபொறுக்கத் தேடுபவனுண்டா? அவன் பிழைபொறுத்து இரட்சிப்பேன் என்று சொல்வான்.

நோன்பில் மூன்றுவகை மூன்று திறத்தவர்களுக்குண்டுமென்று (துர்ரத்து) முதலிய கித்தாபுகளிற் சொல்லப்படுகின்றன, முதலாம்வகை (அவாம்கள்) சாமானியர்கள், உடைய நோன்பு. அதாவது வயற்றைத்தீன் குடி முதலியதைவிட்டுக்காத்துக்கொள்வதும், மானத்தலத்தைச் சேர்க்கையைவிட்டுத் தடுத்துப் பேணிக்கொள்வதுமாம். இரண்டாவது "கவாஸ்ஸு" களென்னுந் தெரிவுதலாக்கப்பட்டனதாகிய அடியார்களின் நோன்பு. அதாவது முதலாம்வகையார் தடுத்தவைகளை இவர்களுஞ் செய்யாது தடுத்து நாவால், காதால், பார்வையால், விலக்கானயிராகம், வீண்பேச்சு, முதலியவைகளைக் கேட்பது பேசுவது, பார்ப்பது, முதலியவற்றை விட்டுஞ் சொல்லப்பட்ட அவயவங்களைக் காத்துக்கொள்வது. மூன்றாவது, "கவாஸ்ஸுல்கவாஸ்" என்னுந் தனதானவர்களிற் தனதானவர்களாகிய தெரிவுதலாக்கப்பட்ட நாயகமானவர்களின் நோன்பு. அதாவது முன் சொல்லப்பட்ட இருவகையாரின் கிரியைகளை செய்வதுமல்லாது ஹிருதயத்தைத் துணிகரங்களைவிட்டுத் தாழ்மையாக்கியும் இப்பிரபஞ்ச விஷயங்களையும், நாயன் அல்லாத வஸ்துக்களைவிட்டும் ஹிருதயத்தை திருப்புகிறதுமேயாம்.

ஓ நண்பர்களே! இந்த மூன்றும்வகையாரைப்போலவே நோன்புவைக்கத்தெண்டியுங்கள், கூடாதாயின் இரண்டாம் வகையாரைப்போலாவது நோன்பு வையுங்கள்.

## நோன்பின் விதி.

—※—

நோன்பு வைப்பதற்கு பர்லு 2. முதலாவது நிய்யத்தென்னும் உறுதி இரண்டாவது நோன்பை முறிக்குங் காரியங்களைச் செய்யாது பேணிக்கொள்வது. [இனி] கல்பினால் நிய்யத்து வைக்காமல் நாவினால் மாத்திரம் நிய்யத்துச்சொன்னால் நோன்பு கூடாது. இன்ன நோன்பென்று குறித்து நிய்யத்து வைக்கவேண்டும். தினந்தோறும் இராவில் நிய்யத்துவைத்து, இறந்தவுடனே நாளைப்பிடிக்கிற நோன்பைக்குறித்து நிய்யத்துவைத்துக்கொள்ளலாம். அப்படி நிய்யத்துவைத்த பிறகு கிழக்கு வெளிக்கிறவரையிலும் தின்னலாம் குடிக்கலாம், சம்போக முதலியவை நடத்தலாம், [இனி] நோன்பை முறிக்கும் வஸ்துக்களை வயிறு முதலிய வேறொரு துவாரத்தில் சேராமல் தடுத்துக் கொள்கிறது. கலப்பற்ற துப்புநீரை விழுங்கியதால் நோன்பு முறியாது. ஆனால் தலையின் அல்லது நெஞ்சியின் காறல் வாய்க்கு வந்தபின் விழுங்கினால் நோன்பு முறியும். குளித்தாலும், எண்ணெய் தேய்த்தாலும் சுறுமாப்போட்டு அதன் சுவை வாயில் வந்தாலும், முறியாது. கிழக்கு வெளித்த பிறகு அல்லது பகல் ஜிமாகுசெய்தாலும், கையினால் அல்லது வேறொரு விதத்தால் நாதை வெளிப்படுத்தினாலும், வேண்டு

மென்று சத்திசெய்தாலும், முறியும். ஆனால் சைத்தான் ஹறக்கத்தாலும், ஒரு பார்வையால், அல்லது யோசனையால் மணி வெளிப்பட்டாலும் அல்லது தன்னை யிசைத்துச் சத்திவந்தாலும் குற்றமில்லை, முறியாது.

## நோன்பின் ஸுன்னத்து.

நோன்புக்கு ஸுன்னத்து 7 உண்டு. 1-வது ஸஹருக்குவ ஜிவணிப்பது. 2-வது கிழக்குவெளிக்கிறதைபயப்படாமட்டிலும் ஸஹர்செய்வதைப் பிற்படுத்துவது. 3-வது சூரியனஅஸ்தமித்தது திட்டமானால் நோன்பு திறப்பதைச் சுறுக்குப்படுத்துவது. 4-வது ஈத்தம் பழத்தால் நோன்பு திறப்பது. 5-வது நோன்பு திறக்கும்போது "அல்லாஹும்ம லக்ஸும்து, வஅலாறிஸ்கிக்க அப்தர்த்து" என்று ஓதுகிறது. 6-வது பிறருக்கு நோன்பு திறப்பி வைக்கிறது. 7-வது றமளானில் ஓதல், கொடை நல் கருமம், இக்திகாபு, இவைகளை மிகுதப்படுத்துவது.

நபி நாயகம் திருவுளமாயிருக்கிறார்கள்;—ஒருமிடர்த் தண்ணீர் கொண்டாவது ஸஹர் செய்யுங்களென்று. ஸஹரைப் பிற்படுத்துவது முர்ஸலான நபிமார்களின் வழமையிலுள்ளது. இன்னும் ஈத்தம் பழமுள்ளவர் அதுகொண்டும் இல்லாதவர் தண்ணீர் கொண்டும் திறக்கவேண்டியது.

பொய் புறம் கோள் ஒருவனை யேசுது பேசுவது பொய்ச்சாட்சி செய்வது முதலான ஹறாமான விஷயங்கள் நோன்புடைய தவாபை முறிக்குமென்று இமாம்கள் ஒற்றுமையாகச் சொல்லியிருக்கிறார்கள். ஐந்து கருமம் நோன்பை முறிக்கும், 1-வது பொய், 2-வது புறம், 3-வது கோள், 4-வது இச்சையுடன் பார்ப்பது, 5-வது பொய்ச்சத்தியம் என்று நபிகள் நாயகம் திருவுளம்பற்றி யிருக்கிறார்கள்.

## நல்லுபதேசம்.

எங்கள் இரட்சக நாயகர் சர்தாறுல் முர்ஸலீன் முஹம்மது நபி அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்கள் திருவாய் மலர்ந்து, எவனொருவன் தனக்கொரு தோழன் வேண்டுமென நாடுகிறானோ அவனுக்குச் சகல விஷயங்களிலும் அல்லாகுத்த ஆலா போதுமாயிருக்கிறான்.

எவனொருவன் தனக்கொரு மருகுதலாகிய துணைவன் வேண்டுமென நாடுகிறானோ அவனுக்கு குர்ஆன்சரீபு போதியதாயிருக்கின்றது

எவனொருவன் தனக்கொரு நல்லுபதேசி வேண்டுமெனத் தேடுகிறானோ அவனுக்கு மவுத்து (மரண ஞாபகஞ்செய்தல்) போதியதா யிருக்கிறது.

எவனொருவன் தான் ஐசுவரியவானாய் வாழ்ந்திருக்க நாடுகிறானோ அவனுக்கு உள்ளதைக்கொண்டு திருப்தியடைந்தல் போதியதா யிருக்கின்றது, (என்று) அருளியிருக்கின்றார்கள்.

ஆகவே, அல்லாகுத்த ஆலாவை நினைத்தோறும் ஐந்து நேரமும் தொ

ழுகிறது கொண்டும், காலை நேரம் மாலை நேரமும் மற்றும் நேரங்களிலும் (திக்று) ஞாபகஞ்செய்தல் அதாவது தியானஞ்செய்தலைக் கொண்டும் அவனைத் தொழுதுக்கொள்ள வேண்டிய தாவசியகம். ["தொழுவோர்க்குண்டு தெய்வத்துணை."]

குர்ஆன் ஷரீபைத் தனக்குத் துணையாக்க வேண்டுமாயின் அதை யோதி மறக்கவிடாமல் எவ்வேளையும் பரிசுத்தமும் பயபக்தியுமாய் ஓதியே துணைக்கொள்ள வேண்டிய தாவசியகம். ["தொட்டாற் றோழன் விட்டால் மாற்றான்."]

ஒருவனுக்கு மரணபயம் மனதைவிட்டொழியா திருக்குமாயின அவன் பாவக்கிரியைகளைச்செய்யப் பயப்படுவான். அதைமறந்தால் எந்த உபதேசியின் உபதேசத்தையும் அங்கிகரியான், ஆகையினாலே எங்கள் நாயகம் மவுத்தை நினைப்பதையே உபதேசமாகத் திருவுளம்பற்றினார்கள். மரணம் வந்துயிரை பிடுங்கிவிடும் என்கிற பயம் எவ்வேளையு மனதிலிருக்கவேண்டியதாவசியகம். [சாவதை நினைப்போர் பாவத்தைச்செய்யார்.]

ஒருவன் தான் செய்கிற தொழிலினால் தனக்குண்டாகிறதைப் பொருந்தி அதுவே பெரும் பாக்கியமெனக் கருதி, வரவுக்குத்தக்க செலவுசெய்து வரவேண்டியது. அப்படிச் செய்து வந்தால் அவன்மட்டில் அவன் ஓர் சீமான்தான், ஆகையால் உள்ளதைக் கொண்டு காலத்தைப் போக்கவேண்டிய தாவசியகம். [உள்ளதைக் கொண்டு இ[illegible]வோர் அறிஞர்.]

ஆகையால் இதோ மேலே கூறப்பட்ட நான்கு கருமத்திலும் உறுதிபெற்று நடக்காதவனுக்கு நரகம்போகிய தென்று எங்கள் நபிகள் பெருமானார் திருவுளம்பற்றி யிருக்கின்றார்கள்.

## பெருமை யென்பது நாயினுங் கீழ்மை.

மஹாத்துமாக்களில் ஒருவராகிய அபூயசீதுல் புஸ்தாமி றளியல்லாகு அன்கு அவர்கள் ஒரு நாள் ஒரு தெருவில் போகும்போது அந்தத் தெருவில் அவர்கள் சமீபத்தில் ஒரு நாயும் போனது. அந்த நாய் அவர்களில் பட்டுவிடுமென்று கருதி தங்கள் கையிலிருந்த கைலேஞ்சியால் தூரத்தினார்கள். உடனே அல்லாகுத்தஆலா அந்த நாயை அவர்களோடு பேசும்படி செய்வித்தான். அப்போது அந்த நாய் இந்த மஹாத்துமாவை நோக்கி, ஓ அபா எசீதே! நான் நாய்தான். நான் ஈரமாயிருக்கும்போது அசுத்தமென்றும், என் சரீரம் காய்ந்திருக்கும்போது சுத்தமென்றும் நீதஞ் செய்வார்கள். நான் எங்கெங்கு சென்றாலும் என்னை நாயென்று வெருட்டுவார்கள். நீங்கள் எங்கெங்கு சென்றாலும் உங்களை கனதிமரியாதையோடு பேசி பெரியோர்களென்று சங்கை செய்து அங்கிகரிப்பார்கள். ஆகையால், உங்களுக்கு அந்தப் பெருமைத்தன முண்டாயிருக்கிறது மாத்திரமல்ல, உங்களுக்கு இரணங் கிடைக்காதென்கிறதுபோல கருதி அல்லாகுத்தஆலா அளவில் பரஞ்சாட்டாமல் முந்[illegible]

யும் வைத்துக்கொண் டிருக்கிறீர்கள் நான் மிகவுங் கீழான மிருகமாயிருந்தும் அல்லாஃ அளவில் பரஞ்சாட்டிக் கொண்டிருந்து கிடைத்தால் தின்பேன், கிடையாவிட்டால் அல்லாவே கதியென்று பொறுத் திருப்பேன். ஆனால் என்னிலுண்டா யிருக்கின்ற அசுத்தத்தின் நிதமாவது துப்பரவான தண்ணீரால் ஏழு முறை கழுவ வேண்டியது அப்டிக்கழுவுவதில் ஒரு முறை மண்ணைக்கலந்து கழுவினால் நீங்கிப்போகும். உங்களிடத்திலுண்டா யிருக்கிறபெருமைத்தனத்தை யேழு கடலில் கழுவினாலுந் துப்பரவாகா தென்று சொல்லிற்று.

இதைக்கண்டவர்கள் மிகவும் ஆச்சரிய மடைந்தார்கள்.

ஆதலால் இதனால் நாம் படித்துக் கொள்ளவேண்டியதாவது, பெருமையானது மிகவும் கீழானதென்றுங்கெடுதியென்றும், உண்மை விசுவாசிகளாகிய முஸ்லிம்கள் தாழ்ச்சியாக நடக்கவேண்டுமேயல்லாது பெருமையடிக்கிறதுந் தன்னைத் துதிக்கிறதும் பிறரைத் தூசிக்கிறது மாகா வென்பதுவாம்.

## நீதிவாக்கியங்கள்.

1. அல்லாகுத்த ஆலாவை வணங்கி முத்தியின்பம் பெறும்படியே நம்மைப் படைக்கப்பட்டது.

2. இஸ்லாம் என்னும் மார்க்கத்தை யனுசரித்து விதி விலக்குகளைக் கவனித்து வணங்கினா லல்லாது முத்தி பெறுவது கூடாது.

3. அல்லாகுத்த ஆலாவின் பேரில் ஆசைகொண்டவனுக்கு பூலோக வாழ்க்கை பெருந் துன்பமாகும், அந்த துன்பத்துக் கவன் ஆண்டவனிற் கொண்ட எண்ணம் நிறைவேறப் பெறுவதே மருந்தாகும்.

4. நாம் இவ்வுலகத்தால் இன்ன நாளில் நீங்குவோமென்பது நமக்கு விளங்காமைப்பற்றி நாம் எக்காலமும் அல்லாவுக்கு வழிபடல் வேண்டும்.

5. அல்லாகுத்த ஆலாவையும் அவனை வழிபடும் நெறியையும், அதனால் எய்தும் பயனையும் உணக்குப் போதிப்பது இஸ்லாம் மார்க்கமே. ஆதலால் முஸ்லிம் என்று பெயர் வகித்துக்கொண்டு இஸ்லாமின் நடவடிக்கைகளை விட்டுப் புறளாதே.

6 நன்மைசெய்கிறதற்குச் சமயம் வாய்க்கும் பொழுது செய்யாதொழிவையாகில் பின்னொருகாலத்தில் அது வாய்ப்பதுஅரிது.

## சரீரசௌக்கியம்.

இவ்வுலத்கதில் பொதுவாக எல்லாச் சீவராசிகளுக்கும் சரீரசௌக்கியத்துக்கு மேற்பட்ட சுகம் வேறொன்றுமில்லை. முக்கியமாக மானிட ஜாதிக்கு சரீர சௌக்கியத்தோடுங் கூடியிருந்தால் தான் ஐம்பொறிகளாலும் அறிந்து அநுபவிக்கத்தக்க இம்மை ( இவ்வுலக ) இனபங்களை மனோம்மியமாக அநுபவித்துச் சுகமடையவும், மறுமைக்கு வேண்டிய சத்காரியங்களை நடத்திக்கொள்ளவும் முடியும். சரீரசௌக்கியம் தப்பினால் போகமும் சித்தியாகாது; யோகமும் சித்தியாகாது. இப்படி இகபரப்பிரயோஜனங்களை அடைதற்கு இன்றியமையாததாயிருக்கும் சரீரசௌக்கியத்தை நாம் எவ்விதத்திலுங் காப்பாற்றவேண்டியது அவசியமாகின்றது.

# இஸ்லாம் மித்திரன்

## பத்திரிகா விஷய

## அறிவித்தல்.

இஸ்லாம் மார்க்கத்தை யனுசரிக்கும் முஸ்லிம்களாகிய எமது சகோதரர்களே! இவ்வுலகின் கண்ணுள்ள சகல மதஸ்தர்களும் அவ்வம்மத விஷயமான கல்விகளைப் பரப்பவேணுமென்ற பேரவாக்கொண்டு சிறு புத்தகங்களும் பத்திரிகைகளும் அச்சிட்டு வெளிப்படுத்தி தங்கள் மதத்தைப் பரவச்செய்து வருகின்றார்களென்பதை நீங்களொவ்வொருவரு மறிந்திருப்பீர்கள். அப்படிச்செய்தலினாலே கல்வி, சீர்திருத்தம், நாகரீகம் முதலியவை அவர்களுக்குள்ளே வளர்ந்து வருகின்றதைக் காண்கின்றோம். கிறிஸ்தவர்கள் சிறு புத்தகங்களும் பத்திரிகைகளும் அச்சிட்டுப் பரப்பியும் பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்தும் வந்ததினாலும் வருவதினாலும் அவர்களின் மத விஷயங்கள் பரம்பியும், அங்ஙனமே புத்தர்கள், சைவர்கள் முதலியோர் பத்திரிகைகளும் பள்ளிக்கூடங்களும் வைத்தலினால் மதவிஷயத்திலும், உலக காரியங்களிலும் பற்பல தேர்ச்சிகளடைந்து வருகின்றார்கள் என்பதற்கு ஆட்சேபனை யுண்டா? இல்லை; இல்லை.

ஆனால் பொய்யும் கட்டுவாக்கியங்களும் அனாச்சாரங்களும் நிறையப்பெற்ற இதர மதங்கள் "முயற்சிமெய் வருத்த கூலிதரும்" என்னு முதுமொழிக்கிணங்க அவ்வவர்களின் முயற்சியால் வியக்கத்தக்க இவ்வளவு தூர மோங்கிவருமேயானால், ஒப்பற்ற சத்த சத்திய முத்திக்குரிய இஸ்லாம் மார்க்கத்தவர்கள் கல்வி விருத்திக்குரிய ஒரு சிறு முயற்சியேனும் செய்துவந்தால் எவ்வளவு மேன்மையைத்தரும் என்பதை நாம் இங்கே சொல்லவும் வேண்டுமோ.?

இஸ்லாம் மார்க்கானுசாரிகளாகிய நாங்கள் எங்கள் மார்க்கத்தை பரப்புகிறதற்காக தென் இந்தியா இலங்கையில் என்ன முயற்சி தான் செய்திருக்கின்றோமென்று சற்று ஆராய்ந்து பார்ப்போம் பள்ளிக்கூடங்களை முறையாய் ஒழுங்குப்படி ஸ்தாபித்திருக்கின்றனவா? மார்க்கப் பத்திரிகைகளையும் சிறு புத்தங்களையும் அச்சிட்டு புறமதத்தார் எம்மார்க்க விசுவாசங்கொள்ளும்படியும், எம் முஸ்லிங்கள் மார்க்க தேர்ச்சி யடையும்படியும் பகிரங்கப்படுத்தப் பட்டனவா? இல்லை என்றே கூறலாம்.

ஆனால் பிரகாசமுடைய ஒரு விழக்கைக் கொழுத்தி பெட்டிக்குள் வைத்துப் பூட்டிய தன்மையாய் எம்மார்க் கல்விகளைப் பரப்பாது வைத்தலினால் அபிவிருத்திக்கு எவ்வளவும் குறைவேயன்றி வேறில்லை.

இக்காலத்தில் ஐரோப்பாவில் லிவர்ப்பூல் முதலிய நகரங்களிலும் அமரி

க்கா ஐக்கிய மாகாணத்தில் நியூயோர்க் முதலிய பட்டணங்களிலும் புதிதாய் எங்கள் இஸ்லாம் மார்க்கானுசாரிகளாகிய துரைமக்கள் சபைகள் ஸ்தாபித்தும் பள்ளிக்கூடங்கள் திறந்தும் மார்க்கப்பத்திரிகைகள் வெளிப்படுத்தியும் வருவதால் இஸ்லாம் என்னும் பிரகாச ஜோதி ஐரோப்பா அமெரிக்கா தேசங்களில் எங்கும் சூரியப் பிரகாசம் போலிலங்கி ஆயிரக்கணக்கான ஜனங்கள் இஸ்லாமிலாகிவருகின்றார்கள். இப்படிப்பட்டவோர் முயற்சி முன்னரே தென் இந்தியா இலங்கை முஸ்லிங்கள் செய்திருப்பார்களேயாயின் இந்துக்கள் சிங்களவர்கள் முதலியவர்களில் எத்தனையோ லட்சப் பேர்கள் முஸ்லிம்களாயிருப்பார்கள் என்பதிற் சந்தேகமில்லை. அதங்ஙனமாக இக்காலத்திலாவது எங்கள் முஸ்லிம்கள் இப்படிப்பட்ட நன் முயற்சிகளில் கையிடாதிருப்பது எவ்வளவு வியசனப்படத்தக்க காரியமாயிருக்கின்றது.

இது காரியங்களைச் சற்று கவனித்த கற்றாய்ந்தவர்களாயுள்ள எங்கள் நேசர்களிற் சிலர் எங்கள் மார்க்க விஷயமாக ஓர்பத்திரிகை உண்டாக்கி மார்க்கக் கல்விகளையே பெரும்பாலும் பிரசுரித்து வர வேண்டுமென்று சில பல முறை எம்மைக் கேட்டுக்கொண்டமையால் **அல்லாகுத்த ஆலாவின்** உதவியையே பெருதவியாய்க் கொண்டு எங்கள் நேசர்களின் தயவையே உப கருவியாய்க் கருதி ஓர் சிறு பத்திரிகை அச்சிட்டுப் பரப்ப ஆரம்பித்து அதற்கு **இஸ்லாம் மித்திரன்** எனனும் பெயர் கொடுத்து சென்ற சஃபான் மாதம் 15 ந் திகதியாகிய பராஅத்துடைய சங்கையாகிய வருசையாகிய மகத்தான நாளில் முதற் பிரதியை வெளிப்படுத்தினோம். அதன் இரண்டாம் பிரதியை இன்று வெளிப்படுத்துகின்றோம். இவ்விரு பிரதிகள் மாத்திரமே நாம் முன் அறிவித்தபடி இலவசமாகக் கொடுத்தோம்.

இனிவரும் மூன்றாம் பிரதி றமளான் மாதம் 15 ம் நாளில் வெளிப்படுத்துவோம். இதோடு வரும் அச்சடிக் கடிதத்தில் காட்டிய விபரப்படி எழுதி தங்கள் கையொப்பமிட்டு முற்பணத்துடன் அனுப்புகிறவர்களுக்கு மாத்திரம் மூன்றாம் பிரதி அனுப்பப்படும். அஃதல்லாதார்க்கு பத்திரிகை சேர்வது கடினம்.

சில பத்திரிகைகளுக்குச் சிலர் முற்பண மனுப்பிய சில காலத்தில் அப்பத்திரிகைகள் அகால மரண மடைந்தமையால் தாமனுப்பிய பணம் மோசமாய்ப்போய் நஷ்டமடைந் திருப்பதால் இப்பத்திரிகைக்கும் பணமனுப்ப அச்சப்படா திருக்கமாட்டார்கள் (அப்படிவராது அல்லாகு சுப்ஹானஹுவதஆலா காப்பாற்றுவாராக).

எங்கள் பத்திரிகைக்கு முற்பண மனுப்புகிறவர்களுக்கு நாம் உத்தரவாதியாயிருப்பது மாத்திரமல்ல, அகால விடையூறுகள் காத்திராப்பிரகாரம் நிகழ்ந்த காலத்தும், அப்படிப் பணங் கொடுத்தவர்களின் தொகையைத் திரும்பக்கொடுக்கவும் எத்தனமாயிருக்கின்றோம். என்னை?

இப்பத்திரிகையை அச்சிடுவதற்காகவே நாம் ஓர் அச்சுக்கூடத்தை ஸ்தாபித்து தக்க ஆதாரத்துடன் வைத்திருப்பதாலே இங்ஙனம் திட சாத்திரமாய்ப் பேசினோமேயன்றி பெருமையைக் காட்டியல்ல வென்பதை நம் இஸ்லாம் மித்திரர்கள் ஒவ்வொருவருங் கருதி தங்கள் சொந்த முயற்சிபோல் எங்கள் முயற்சிக் குதவிபுரிந் தாதரிப்பார்களென்பதை எங்கள் பிரார்த்தனையாய் முடிக்கின்றோம்.